பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 08 2026** **TUESDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) மின்னணு வர்த்தக சந்தை வெளிப்படைத் தன்மையை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) பிரதமரின் அழைப்பை ஏற்று இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றி சுதந்திரப் போராட்ட தியாகிகளை நினைவுகூர்வோம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3) தமிழகத்தில் நவோதயா பள்ளிகளை தடுக்க மாநில அரசு முயற்சிப்பது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

4) மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணி வெற்றிபெற 183 ரன் என்ற இலக்கை திருச்சி அணி நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

மின்னணு வர்த்தக சந்தை வெளிப்படைத் தன்மையை உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் எழுதிய மின்னணு வர்த்தக சந்தை தொடர்பான கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், வெளிப்படையான கொள்முதல் மற்றும் விரிவான அளவில் வர்த்தக பங்கேற்பு மற்றும் புதிய வாய்ப்புகளை இது உறுதி செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

மின்னணு வர்த்தக சந்தைக்கான இணையதளம் புதிய தொழில்நுட்பத்துடன் வர்த்தகத்தை மிகவும் எளிமைப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறு — குறு மற்றும் நடுத்தர தொழில்துறையினர் மற்றும் பெண் தொழில் முனைவோர் அதிக அளவில் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்தவும் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் ஆரோக்கியமான போட்டியை உருவாக்கவும் மின்னணு வர்த்தக சந்தை வழிவகுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தன்னிகரற்ற தியாகத்தை போற்றும் வகையில் இவ்வாண்டு சுதந்திர தின விழாவில் அவர்களுக்கு மரியாதை செலுத்துவோம் என பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள

அழைப்பை ஏற்று செயல்படுவோம் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், எழுச்சியோடும், பெருமிதத்தோடும், தேசியக் கொடியை ஏற்றி, நமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்துவோம் என்றும் கூறியுள்ளார்.

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றி நமது சுதந்திர உணர்வை வெளிப்படுத்துவோம் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நீட் நுழைவுத் தேர்வுக்கு எதிரான தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் இன்று நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை பேரவையில் தாக்கல் செய்து பேசிய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ், ப்ளஸ் 2 தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையிலேயே மாணவர்கள் மருத்துவப்படிப்பில் சேருவதற்கு ஏதுவாக இந்த தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டார்.

தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணவர்கள் கிராமப்புற மற்றும் சமூக பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளை நீட் பெரிதும் பாதிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

நீட் தேர்வுகளில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் முறைகேடுகளை கருத்தில்கொண்டு நீட் தேர்வு முறையை ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தேசிய மருத்துவ ஆணையச்சட்டம், இந்திய மருத்துவ முறைகளுக்கான தேசிய ஆணையசட்டம் உள்ளிட்டவற்றில் மத்திய அரசு திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து, குரல் வாக்கெடுப்பு மூலம் அரசினர் தனித் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பேசிய பிஜேபி உறுப்பினர் திரு போஜராஜன், நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்களிடையே தவறான கருத்துக்கள் பரப்பப்படுவதாக கூறினார்.

நீட் தேர்வின் மூலம் தமிழகம் உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள மாணவர்களும் பயன்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த தீர்மானத்திற்கு திமுக, அஇஅதிமுக, பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

<<<<<<>>>>>>

வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த மசோதாவை தற்போதைய வடிவிலிருந்து திரும்பப்பெறுமாறு மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் இன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது.

பேரவையில் இன்று இந்த தீர்மானத்தை பள்ளிக்கல்வி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் தாக்கல் செய்து பேசுகையில், **FCRA** எனப்படும் இந்த மசோதாவில் கொண்டுவரப்படும் புதிய விதிகள் தொண்டு நிறுவனங்களின் தன்னாட்சியை பாதிக்கும் என்று குறிப்பிட்டார்.

சிறுபான்மையினர் நடத்தும் கல்வி மற்றும் சமூக நல நிறுவனங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் அவர் கூறினார்.

இந்த மசோதா குறித்து மாநில அரசுகள், தொண்டு நிறுவனங்கள், கல்வி, மருத்துவம் மற்றும் சமூக அமைப்புகளுடன் விரிவான ஆலோசனையை மேற்கொண்டபின் புதிய மசோதாவை கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ராஜ்மோகன் குறிப்பிட்டார்.

பின்னர், இந்த தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

<<<<<<>>>>>>

போதைப்பொருள்கள் இல்லாத தமிழ்நாடு என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மாநிலம் முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

சென்னை மாநிலக்கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு விஜய், போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழியை செய்துவைத்தார்.

கல்லூரி மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் உறுதிமொழி ஏற்றனர்.

ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும், அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் உறுதிமொழி ஏற்பு நடைபெற்றது.

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — தண்டபாணி - 48 Sec. )*

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் நவோதயா பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வரும் நிலையில், தமிழகத்தில் இப்பள்ளிகளை தடுக்க மாநில அரசு முயற்சிப்பது கண்டனத்திற்குரியது என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஊரக பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உயர்தரமான சிபிஎஸ்இ கல்வியை முற்றிலும் இலவசமாக வழங்கும் பணியை நவோதயா பள்ளிகள் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு விஜய் தலைமையிலான மாநில அரசு உச்சநீதிமன்றத்தில் நவோதயா பள்ளிகளை தடுக்க வேண்டும் என பிரமாணப் பத்திரத்தில் கூறியிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், மாணவர்களின் கல்வி உரிமையை பாதிக்கும் இந்த போக்கை மாநில அரசு கைவிட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி நவோதயா பள்ளிகளுக்கு தேவையான நிலங்களை தவெக அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

சுதந்திர தினத்தன்று தமிழகத்தில் நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் மேகதாது அணை திட்டத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கர்நாடக அரசு இந்த அணையை கட்டுவதற்கு ஆயத்தப்பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், இதனால் காவிரி பாசன மாவட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் என்றும் கூறியுள்ளார்.

இந்த அணையை கட்டுவதற்கு எதிராக மத்திய அரசிடமும், கர்நாடக அரசிடமும் தமிழக அரசு வலிமையாக வாதாட வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 42 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர் பகுதிகளில், பறிமுதல் செய்யப்பட்ட 3 ஆயிரத்து 110 கிலோ போதைப் பொருட்களை காவல்துறையினர் தீயிட்டு அழித்தனர்.

----------------

சென்னை மாவட்டத்தை சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மாவட்ட அளவிலான தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப்

போட்டிக்கு **cmtrophy.sdat.in** என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்யலாம் என்று ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

-------------

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்ததையடுத்து, பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் 2-வது நாளாக இன்று தடைவிதித்துள்ளது.

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணி வெற்றிபெற 183 ரன் என்ற இலக்கை திருச்சி அணி நிர்ணயித்துள்ளது.

திண்டுக்கல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த திருச்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 8 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிவரும் நெல்லை அணி சற்றுமுன்வரை 13 ஓவரில் ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 104 ரன் எடுத்துள்ளது.

இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில், கோவை - திருப்பூர் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>>